நிதிகளும், மருத்துவ மனை அதிகாரிகளுடன் ஒத்துழைத்து, தங்குதடையின்றி பிலிம்களைத் தொடர்ந்து வழங்கிவருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கைகளினால் நிலைமை மிகவும் சீரடைந்துள்ளது. மருத்துவ மனைகளுக்கும் போதுமான X கதிர் பிலிம்கள் தற்போது கிடைத்து வருகின்றன.

Army Medical Corps

* 279 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government have proposed to introduce new concessions by way of incentives to doctors offering to join the Army Medical Corps ; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) & (*b*) : The Government granted the following concessions to induce doctors to join the Army Medical Corps :—

(i) A family allowance of Rs. 250 per mensem to the doctors of the Madras Medical Service whether temporary or regular who joined the Army.

(ii) Reservation of 50 per cent of vacancies in the cadre of Assistant Surgeons for doctors who rendered military duty in connection with the emergency which arose in 1962 and 1965.

திரு. வை. சங்கரன் : இந்த பாமிலி அலவன்ஸ் ரூ. 250 போன ஆண்டு செப்டம்பரிலிருந்து இதுவரைக்கும் கொடுக்கப்படவில்லை, அவர்களுக்குச் சேரவில்லை என்ற புகார் வந்திருக்கிறதா ? அதை சர்க்கார் பரிசீலித்து வேண்டிய நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அம்மாதிரியான தகவல் கிடைக்கும்பொழுது அவ்வப்பொழுது கொடுத்துக்கொண்டு வருகிறோம்.

Medical Colleges

*280 *Q*.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the number of posts in the cadre of Reader and Assistant Reader sanctioned in the Department of Pharmaceutics in Madurai Medical College ; and

(*b*) the reason for the delay, if any, in appointing candidates to those sanctioned posts ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) Three posts of Readers and seven posts of Assistant Readers.

(*b*) Appointments to these posts could not be made as qualifications, method of recruitment, etc., had to be settled first.

9th August 1966]

திரு. செ. மாதவன் : இப்படி போஸ்டுகள் அனுமதிக்கப்பட்டு எத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டன? காலதாமதத்திற்குக் காரணம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஏற்கனவே சொன்ன மாதிரி இந்த மெதெட் ஆப் ரெக்ரூட்மெண்டு, குவாலிஃபிகேஷன் இவைகளையெல்லாம் டிஸைட் பண்ணின பிறகுதான், அவர்களை அப்பாயிண்ட் செய்ய முடியும்.

* 281 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960 கல்வியாண்டிலிருந்து 1965 கல்வியாண்டுவரை எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றவர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களில், ஆதித்திராவிட மாணவர்கள் எத்தனைபேர்?

(உ) எத்தனை சதவிகிதம்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) 1,841.

(இ) 164.

(உ) 9 சத விகிதம்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரிகளில் இடம் கொடுக்கும்பொழுது 16 சத விகிதத்திற்குக் குறையாமல் ஆதிதிராவிட மக்களுக்குக் கொடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நடைமுறையிலும் இருப்பதாகச் சொல்கிறார்கள். மொத்தம் எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்று வெளிவந்த டாக்டர்கள் 1,341 பேர்களில், 164 பேர்கள்தான் ஆதிதிராவிடர்கள் என்று சொல்கிறார்கள். சதவிகிதத்தைக் கேட்டால் 9 சதவிகிதம் சொல்லியிருக்கிறார்கள். பதினாறு சதவிகிதத்திற்கும் குறைவாக இருப்பதற்குக் காரணம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பதினாறு சதவிகிதத்தினருக்கு அட்மிஷன் கொடுக்கிறோம். அப்படிக் கொடுத்தும், சிலர் தேறவில்லை என்றால் யார் பொறுப்பு? அதனால் தான் 9 சத விகிதம் இருக்கிறது.

* 282 *Q.*—SRI K. R. SAMBANDAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state the number of students admitted in Medical Colleges in the State in 1965–66, from among the Harijans, the Backward Communities and Forward Communities?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஹரிஜனங்கள் 135.

பின்னிலை வகுப்பினர் 230.

முன்னிலை வகுப்பினர் 554.